# பெண் ஊர்த் தெய்வத் தோற்றக்கதைகள்

**By**

**ஆனந்த நாயகி, ப.**

*உதவிப்பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோயில், தமிழ்நாடு, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இறைவழிபாடு என்பது பெரும்பான்மையான மக்களின் வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாக இன்றளவும் இருப்பதை அறியமுடிகிறது. இருப்பினும், அவ்வழிபாட்டு முறைகளில் ஒவ்வொரு இனத்து மக்களிடையேயும் பெரும் வேறுபாடு நிலவுவதையும் காணமுடிகிறது. தமிழர் அல்லாதோரின் ஆதிக்கம் தமிழர் நாட்டில் கோலோச்சியதன் விளைவாகத் தமிழரின் மரபுவழி வழிபாட்டு முறைகள் காலந்தோறும் மாற்றங்களுக்கு உட்பட்டிருப்பினும் ஊர்த்தெய்வ வழிபாட்டு மரபு இன்றளவும் தனித்தன்மை உடையதாகவே உள்ளது எனலாம். இயற்கை வழிபாடு, நடுகல்வழிபாடு, குல தெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்ற படிநிலை மாற்றங்கள் தமிழரின் இறை வழிபாட்டில் நிகழ்ந்திருப்பினும் அவை மரபுசார்ந்து இன்றளவும் தொடரப்படுகின்றன எனலாம். ஊர்த்தெய்வங்களை அதிக ஆற்றல் மிக்கவர்களாகக் காட்டுவதற்காக அவற்றைப் பெருந்தெய்வங்களின் அவதாரங்களாக அல்லது உறவுமுறையாக அல்லது பெருந்தெய்வங்களிடமிருந்து வரம் வாங்கி வருவனவாகக் காட்டும் வழக்கம் இருந்திருக்கிறது என்பதை வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம், வாய்வழிக்கதைகள் மூலம் அறியமுடிகிறது. அத்தகைய புனைகதைகளைப் புறம் தள்ளிவிட்டு ஆழ்நோக்குப் பார்வையில் ஆய்வு செய்தால் ஒவ்வொரு ஊர்த்தெய்வத்திற்குள்ளும் உண்மையான வரலாறு இருப்பதை அறியலாம். அந்த வகையில் ஊர்த்தெய்வ வரிசையில் இடம் பெற்றிருக்கும் பெண் தெய்வங்களின் கதைகளை நிகழ்த்துக் கலைகள் மூலம் ஆய்வு செய்து அவற்றுள் உறைந்திருக்கும் பல்வேறு அவலச்சுவைகளையும், வரலாற்று உண்மைகளையும் வெளிக்கொணரும் நோக்குடன் அமைந்துள்ளது இந்த ஆய்வுக்கட்டுரை.*

***கலைச்சொற்கள்:*** *பெண், ஊர்த் தெய்வம், தோற்றக்கதைகள்*

## முன்னுரை

மனிதனால் தெய்வநிலையை அடைய இயலும் என்பதற்கு,

*“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்”*

என்ற குறட்பா சான்றாகிறது. வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் மட்டுமன்றிப் பிறரால் வாழ்வை இழந்தவர்களும் தெய்வநிலையை அடைவர் என்பதை ஊர்த்தெய்வ வரலாறுகள் பலவும் அறியச் செய்கின்றன. ஆடவர்கள் மட்டுமன்றிப் பெண்டிர் பலரும் பல்வேறு இன்னல்களால் மாண்டு தெய்வநிலையை அடைந்துள்ளனர் என்பதற்குக் குலைவாழை இசக்கி, தோட்டுக்காரி, பூஉளம் கொண்டாள் போன்ற தெய்வ வடிவங்கள் சான்றாகின்றன. அத்தெய்வ வடிவங்கள் குறித்தும், அவ்வடிவங்களின் தோற்றம் குறித்தும் ஆராய்ந்து உரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஊர்த்தெய்வத் தோற்றம்

ஊர்த்தெய்வக் கதைகளைப் பொறுத்தவரை, பல கதைகள் காரணமின்றிக் கொலை யுண்டவர்கள், தற்கொலை செய்தவர்கள், இயற்கையைக் காக்க தன் இன்னுயிரை நீத்தவர்கள், மக்கள் நலம் பேண தன்னுயிரைத் தானம் செய்தவர்கள் பற்றியனவாக அமைந்துள்ளன. சாதி பேதத்தாலும், வறுமையின் உச்சத்தாலும், சமுதாய மாந்தரிடையே பலகாலமாக நிலவி வந்த ஏற்றத்தாழ்வுகளாலும் பாமர மக்கள் எத்தகைய இன்னல்களையெல்லாம் அனுபவித்து வந்திருக்கிறார்கள் என்பது அத்தெய்வ வரலாறுகளின்வழி அறிய இயலுகிறது.

பகுத்தறிவுமிக்க மானிடராயினும், விலங்குகளுக்கு நிகரான கொடியவர்களால் துன்புற்று மாண்டு போக நேர்ந்திருக்கிறதே தவிர, அக்கொடுமையை ஏனென்று கேட்கவோ, அதற்கு எதிராகப் புரட்சி செய்யவோ, நீதியைப் பெறவோ இயலாதவர்களாகவே மாந்தர் பலரும் இருந்துள்ளனர் என்பது அறியலாகிறது. அதுமட்டுமின்றிப் பெண்ணாசையால் ஏற்பட்ட விபரீத விளைவுகளும், அதனால் ஏற்பட்ட தற்கொலைகளும் தெய்வத் தோற்றத்திற்கு அடிகோலியுள்ளன. கொலையின் காரணமாக மற்றும் தற்கொலையின் காரணமாக மரணித்தவர்கள், ஊர் மக்கள் மற்றும் அவர்களது மரணத்தில் தொடர்புடையவர்கள், உறவினர்கள் போன்றோரால் அன்பின் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் வழிபடப் பெற்றுள்ளனர் என்பதை அறியலாம். ஒரு காலத்தில் நடந்த நிகழ்வுகள் வரலாறுகளாகியிருப்பதோடு, பின்னாளில் புனைவுகளுக்கும் இடமளித்திருப்பதை அத்தெய்வக் கதைகள் வாயிலாக அறியமுடிகிறது. அத்துடன் அத்தெய்வ வடிவங்களின் மீது இரக்கமும் பிறக்கிறது.

**குலைவாழை இசக்கி**

சாதீய ஏற்றத்தாழ்வுகளால் ஒடுங்கிப் போன விளிம்புநிலை மாந்தர்கள் வழியில் தோன்றிய பெண் ஒருவளே பின்னாளில் பல்வேறு சாதியினரால் குலைவாழை இசக்கி அம்மன் என்னும் பெயரில் வழிபடப் பெறுவது வரலாற்றால் அறிய இயலுகிறது. ஈவு இரக்கமற்ற கொடியவர்களாக உயர்சாதியினர் இக்கதையில் காட்டப்பெற்றுள்ளனர். அஃதாவது, அடவிமலையில் வாழ்ந்த நம்பிமார் என்ற உயர்சாதியினர் தங்களுக்குச் சொந்தமான வாழைத்தோப்பைக் காவல் செய்ய ஆள்தேடுகின்றனர். காக்காச்சி மலையில் வாழ்ந்த காளிகாத்த புலையனின் சீடனான இருளிகாத்த புலையனையும், அவன் மனைவியையும் பாதுகாப்புப் பணியில் அமர்த்தினர்.

*“கன்னிக்குலை எங்களுக்குக்*
*கண்டதிலே நேர்பாதி உங்களுக்கு*
*நஞ்சை புஞ்சை நேர்பாதி*
*நாங்கள் தாரோம் உங்களுக்கு”*

என்று ஊதியம் வழங்க ஒத்துக்கொண்டனர். அஃதாவது, முதன்முதலில் வாழை தரும் குலையை உரிமையாளர்கள் எடுத்துக்கொள்வதென்றும், அதன்பின் வரும் விளைச்சலில் நேர்பாதி அவர்களுக்குத் தருவதென்றும் வாக்களித்தனர். அதுபோக நன்செய் நிலத்தில் வரும் விளைச்சலிலும், புன்செய் நிலத்தில் வரும் விளைச்சலிலும் பாதியை அளிப்பதாகவும் கூறினர். ஆனால், வாழைத்தோட்டத்தில் விளைந்த முதல் குலையில் உள்ள பழங்களை நிறைமாத கர்ப்பிணியாய் இருந்த இருளிகாத்த புலையனின் மனைவி வேட்கையால் உண்டாள். பழக்குலைகள் காணாமல் போவதை அறிந்த நம்பிமார்,

*“காவல்காக்கச் சொன்னதற்குக்*
*கனிகளையும் தின்றாயோ*
*களவதுவும் செய்தாயோ*
*கள்வனான புலையனே நீ”*

என்றுரைத்து இருவரையும் அடித்து உதைத்தனர். கழுமரம் போன்றிருந்த மரக்கட்டையில் அறியாது விழுந்த இருளிகாத்த புலையன் உடனே மாண்டான். தன் உயிரையும், வயிற்றிலிருந்த குழந்தையையும் காக்க ஓடிய அவன் மனைவி நீலகிரி மலைநோக்கி ஓடி அங்கிருந்த இசக்கிக்கோயிலைத் தஞ்சம் அடைய, அவளை வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்து வந்ததோடு, அவள் வயிற்றை அறுத்துச் சாகடித்தனர் நம்பிமார் என்பதும், அறியாது செய்த தவறுக்கு இத்தண்டனையோ தாயே? என்று இசக்கி அம்மனிடம் வேண்டிய அவள் ஆவியும், கணவனது ஆவியும் ஈசனிடம் வரம்வாங்கி நம்பிமாரைப் பழி வாங்கின என்பதும் கதையாகும்.

நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணென்றும் பாராது கொடுமை செய்து கொன்றவர்களைப் பழிவாங்குவதாக இத் தெய்வக்கதையமைப்பு உள்ளது. குமரி மற்றும் நெல்லை மாவட்டங்களில் உள்ள இசக்கிஅம்மன்

ஆலயங்களில் இத்தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்தப்படுவதை அறியலாம். அத்தெய்வத்திற்குரிய வழிபாட்டில் வாழைக் குலையுடன் கூடிய வாழைமரம் முக்கியத்துவம் பெறக்காணலாம்.

### தோட்டுக்காரி அம்மன்

முட்டப்பதி என்னும் ஊரில் கோட்டைகட்டி ஆண்ட கோனாண்டி ராஜாவுக்கும், அவர் மனைவி மந்திரப்பூமாலைக்கும் மகளாகப் பிறந்தவள் தோட்டுக்காரி. அவளைக் கொந்தளப்ப ராஜா தன்னைப் பெற்றாள் என்போர்க்கு மகனாகப் பிறந்த குமரப்பராஜா மணம் முடிக்க எண்ணினான். அதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் தோட்டுக்காரியைச் சிறையெடுத்தான். கோனாண்டி ராஜாவும் போரில் கொல்லப்பட்டார். தந்தை இறந்ததை அறிந்த தோட்டுக்காரி சிறையிலிருந்து தப்பித்துத் தீயுள் புகுந்தாள். தன் ஆசை நிறைவேறாததால் குமரப்பராஜாவும் அதே தீயுள் புகுந்தான் என்பது வரலாறு. அதனை,

*“என்தகப்பன் இறந்த பின்னே*
*யானிருந்து என்ன பலன்?*
*மாண்டிடலாம் என்று சொல்லி*
*மங்கை நல்லாள் தோட்டுக்காரி*
*ஏழ்கதவைத் தான்திறந்து*
*வாராளே தோட்டுக்காரி*
-----------------------------------------
-----------------------------------------
*ஆயிழையாள் கற்பினாலே*
*வளருதல்லோ திருவேள்வி*
*அந்தப் பெரு வேள்வியிலே*
*அவளும்தான் சாடிவிட்டாள்*
*தோட்டுக்காரி சாடினதைக்*
*கண்டானே குமரப்பனும்*
*நாமிருந்து என்னபலன்*
*இறந்துவிட வேண்டுமென்று*
*அந்தத் திருவேள்வியிலே*
*குமரப்பனும் சாடுவானே”*

என்னும் வில்லிசைப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. அக்கதையை அகஸ்தீஸ்வரம் திரு.ஆறுமுகப்பெருமாள் நாடார் போன்றோர் வில்லிசை வடிவில் யாத்துள்ளனர்.

### பூஉளங்கொண்டாள்

நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்த மாலைக்குட்டி நாடார் உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பால் கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தை அடுத்துள்ள பொடியன்விளையில் குடியேறினார். 6 ஆண் குழந்தைகளை அடுத்து இறையருளால் பெண் குழந்தை பிறந்தது; அக்குழந்தைக்குப் ‘பூஉளம் கொண்டாள்’ என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். அவளது 13 வயதில் அண்ணன்மார் திங்கள் சந்தைக்கு நூல் நூற்கும் ராட்டை வாங்கச் சென்றனர். வரும் வழியில் சந்தையில் தங்களோடு பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட தெங்கம் புதூரைச் சார்ந்த தங்கமணியோடு நட்புகொண்டு அவர் வீட்டில் உணவருந்தினர். அதன் பலனால் அவர்கள் பெண்கேட்டுவர, தந்தை மறுத்தார். அதனால் ஏற்பட்ட வன்மத்தில் பூஉளம் கொண்டாள் அகஸ்தீஸ்வரர் கோவில் அருகே உள்ள கிணற்றில் தள்ளிக்கொலை செய்யப்பட்டாள். அவளது ஆவி பெண்களைப் பலி வாங்கியதாகவும், அதன்பின் அவள் தெய்வமாக வழிபடப் பெறுவதாகவும் நம்பப்படுகிறது.

இன்றும் அகஸ்தீஸ்வரம் கீழச்சாலையில் பூ உளம் கொண்டாள் அமர்ந்து விளையாடிய புளியமரத்தைப் பெரியவர்கள் சுட்டக் காணலாம். மாலைக் குட்டி நாடார் வீட்டின் கதவு அவரது பரம்பரையினரின் வீட்டில் வாசற்கதவாக இருந்ததை அறியமுடிகின்றது.

குறிப்பாகத் தோட்டுக்காரி, பூ உளம் கொண்டாள் ஆகியோர் பெண்ணாசைக்குப் பலியானவர்களாகவே காட்டப்பட்டுள்ளனர். *“சமுதாயக்கதைகள் எனக் கருதப்படுவன யாவும் அவல முடிவையே கொண்டுள்ளன. கதை கேட்போர் நெஞ்சுருகிக் கேட்டுநிற்கும் நிலையில் தெய்வ நிலை பெற்ற கதைமாந்தர்பால் பக்தியும் நம்பிக்கையும் ஏற்பட இவ்வகைக் கதைகள் பெரிதும்*

*பயன்படுகின்றன. அவல முடிவு எய்தும் கதை மாந்தர் இறுதியில் தெய்வநிலை அடைதலும், ஆண்பால் தலைமைக்கதைகள் யாவும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளின் கொடிய விளைவுகளை எடுத்துரைப் பனவாகவும், பெண்பால் தலைமைக் கதைகள்யாவும், பெண்மையின் மாட்சியினைப் பெருமைப் படுத்திப்பாடுவனவாகவும் அமைந்துள்ள நிலையும் இச்சமுதாயப் பாங்கான கதைகளின் பொதுத்தன்மைகளாகக் காணப்படுகின்றன''* என்னும் தி.சி. கோமதிநாயகம் அவர்களின் கருத்து எண்ணத்தக்கது.

அவலமுடிவுகளாலேயே தெய்வமான ஆண்-பெண் இருபாலாரையும் ஊர்த்தெய்வக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. சுதந்திர வேட்கையுடன் பல்வேறு போராட்டங்களைப் போராளிகள் முன்னெடுத்துச் சென்ற காலக்கட்டத்திலும், பாமர மக்களுக்குள் பல்வித அடிப்படை வாழ்வியல் போராட்டங்கள் நிகழ்ந்ததை இக்கதைகள் காட்டுகின்றன.

**முடிவுரை**

வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் மட்டுமன்றிப் பிறரால் வாழ்வை இழந்தவர்களும் தெய்வநிலையை அடைந்துள்ளனர்.

சாதி பேதத்தாலும், வறுமையின் உச்சத்தாலும், சமுதாய மாந்தரிடையே பல காலமாக நிலவி வந்த ஏற்றத்தாழ்வுகளாலும் பாமர மக்கள் எத்தகைய இன்னல்களை யெல்லாம் அனுபவித்து வந்திருக்கிறார்கள் என்பது அறிய இயலுகிறது.

கொலையின் காரணமாகவும், தற்கொலையின் காரணமாகவும் மரணித்தோர் அன்பின் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் வழிபடப் பெற்றுள்ளனர்.

பழிவாங்கும் தெய்வங்களாகவும், பலிவாங்கும் தெய்வங்களாகவும் பெண் தெய்வங்கள் அறியப்படுகின்றனர்.

## பார்வை நூல்கள்


பரிமேலழகர், உ. ஆ, திருக்குறள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, கககூகூ0.

கழுக்காற மாடன் கதை, குமரன் பதிப்பகம், நாகர்கோயில், திருக்குறள், எண். 50.

கழுக்காரமாடன் கதை.

மேலது.,

தோட்டுக்காரி அம்மன் கதை.

கழுக்காற மாடன் கதை, குமரன் பதிப்பகம், நாகர்கோயில், 2004.

கோமதி நாயகம், தி. சி., தமிழ் வில்லுப் பாட்டுகள், ப. 61, தமிழ்ப் பதிப்பகம், 1.

கால்வாய்க் கரைசாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை, 600 020.

திருக்குறள் பரிமேலழகர், உ. ஆ, திருக்குறள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 1990.



## To cite this article

*****************

Anantha Nayagi, P. (2022). பெண் ஊர்த் தெய்வத் தோற்றக்கதைகள். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 5*(4), 21-25.

*****************************************************************************************

**ABOUT THE AUTHOR**



***Dr. P. Anantha Nayagi*** *working as an Assistant Professor, Department of Tamil, Government Arts and Science College, Nagercoil. She got her Ph.D from Manonmaniam Sundharanar University, Tirunelvel, Tamil Nadu. She has published seven books and fifty five articles in various journals. She organized two seminars and participated so many National and International conferences.*

*******************************************************************************************